செய்தி வெளியீடு எண்.38-2019 நாள்: 15.08.2019

**விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.**

**சுதந்திர தின விழாவில் 114 பயனாளிகளுக்கு ரூ.67,37,964/- மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

**சுதந்திர தின விழாவில் சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.**

**விழாவில் 1000க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்களின் கண்கவர் ஆடல், பாடல் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.**

**சிறப்பாக பணியாற்றிய 229 அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.**

******

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மைதானத்தில் சுதந்திர தின விழா இன்று வெகுவிமர்சையாக கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டது. முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார் அவர்கள் உடன் செல்ல காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அணிவகுப்பினை திறந்த ஜீப்பில் சென்று பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து தீயணைப்புத்துறை, முன்னாள் படைவீரர் நலப்படை, ஊர்காவல்படை, சாரண, சாரணியர், தேசிய மாணவர் படை, சிறார் செஞ்சிலுவை அமைப்பு ஆகியோர்களின் அணிவகுப்பு மரியாதையினையும் ஏற்றுக் கொண்டார்.

சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டதற்கான நிகழ்வை குறிக்கும் வகையில் வெண்புறாக்களையும், வண்ண பலூன்களையும் பறக்கவிட்டார். மேலும், சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று, அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக 10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,55,000/- மதிப்பீட்டில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் மற்றும் நவீன செயற்கை காலினையும், முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பாக திருமண நிதியுதவி மற்றும் ஈமச்சடங்கு நிவாரண நிதி வழங்கும் திட்டத்தின்கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.76,100/- உதவித்தொகையும், வருவாய்த்துறையின் சார்பாக கல்வி உதவித்தொகையாக 35 பயனாளிகளுக்கு ரூ.87,250/- உதவித்தொகையும், தற்காலிக இயலாமை உதவித்தொகையாக 5 பயனாளிகளுக்கு ரூ.60,000/- உதவித்தொகையும், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகையாக 5 பயனாளிகளுக்கு ரூ.60,000/- உதவித்தொகையும்,

விபத்து நிவாரண தொகையாக 5 பயனாளிகளுக்கு ரூ.5,12,500/- உதவித்தொகையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக 10 பயனாளிகளுக்கு ரூ.42,950/- மதிப்பீட்டில் தையல் இயந்திரம் மற்றும் சலவைப்பெட்டிகளையும், தோட்டக்கலைத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.5,31,700/- மதிப்பீட்டில் சிப்பம் கட்டும் அறை, குறைந்த விலையில் வெங்காய சேமிப்பு கிடங்கு மற்றும் பப்பாளி பரப்பு விரிவாக்கம் அமைக்க உதவித்தொகையும், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை சார்பாக 11 பயனாளிகளுக்கு ரூ.1,03,000/- மதிப்பீட்டில் எம்ராய்டரி இயந்திரம் மற்றும் சலவைப்பெட்டியினையும், வேளாண்மைத்துறை சார்பாக பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசன திட்டத்தின்கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.1,90,736/- மதிப்பீட்டில் மழைத்தூவான்களையும், தாட்கோ மூலம் 3 பயனாளிகளுக்கு ரூ.21,80,728/- மானியத்தில் வாகனங்களையும், சிறுசேமிப்புத்துறை சார்பாக 2017-18ம் நிதியாண்டில் மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்ற 2 நபர்களுக்கு ரூ.8,000/- பரிசுத்தொகையினையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் 2019-20 முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் 13 பயனாளிகளுக்கு ரூ.27,30,000/-க்கான உத்தரவினையும் என மொத்தம் 114 பயனாளிகளுக்கு ரூ.67,37,964/- மதிப்பீட்டில் அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து விழுப்புரம் அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளி, விழுப்புரம் ஜான்டுயி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, விழுப்புரம் தூய இருதய ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி, உளுந்தூர்பேட்டை சாரதா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திண்டிவனம் பிளோமினாள் மகளிர் மேல்நிலைப்பள்ளி, கள்ளக்குறிச்சி சக்தி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தியாகதுருகம் மௌன்ட் பார்க் மேல்நிலைப்பள்ளி, விழுப்புரம் இ.எஸ். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, செஞ்சி சானக்கியா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, விழுப்புரம் இமேஜ் நடனப்பள்ளி ஆகிய பள்ளிகளிலிருந்து 1181 மாணவ, மாணவிகள் பங்குகொண்ட கலைநிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக நடைபெற்றன. கலைநிகழ்ச்சிகளில் பங்குகொண்ட அனைத்து பள்ளிகளுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளை திரளான பொதுமக்களும், மாணவ மாணவியர்களும் கண்டு களித்தனர். அதனைத் தொடர்ந்து சிறப்பாக பணியாற்றிய வருவாய்த்துறை, சுகாதாரத்துறை, பொதுப்பணித்துறை, கல்வித்துறை, வனத்துறை, காவல்துறை, வேளாண்மைத்துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த 229 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். சுதந்திர தின விழாவை சிறப்பாக நடத்திட பல்வேறு ஏற்பாடுகளையும், பணிகளையும் செய்து ஒத்துழைப்பு நல்கிய சம்பந்தப்பட்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இவ்விழாவில், விழுப்புரம் சரக காவல்துறை துணை தலைவர் திரு.சந்தோஷ்குமார்,இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார், மாவட்ட வன அலுவலர் திரு.அபிஷேக் தோமர்,இ.வ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (பொ)

திருமதி.க.சரஸ்வதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வெ.மகேந்திரன், சார் ஆட்சியர்கள் திரு.ஸ்ரீகாந்த்,இ.ஆ.ப. (கள்ளக்குறிச்சி), திருமதி.மெர்சி ரம்யா,இ.ஆ.ப. (திண்டிவனம்), திருமதி.சாருஸ்ரீ,இ.ஆ.ப. (திருக்கோவிலூர்), விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இராஜேந்திரன், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.சிவகிருஷ்ணமூர்த்தி,இ.ஆ.ப., துணை ஆட்சியர் (பயிற்சி) திருமதி.கவிதா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) திருமதி.த.அம்புரோஸியா நேவிஸ் மேரி, உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) திரு.ஜோதி (விழுப்புரம்), திருமதி.ரெத்தினமாலா (கள்ளக்குறிச்சி), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) (பொ) திரு.பிரபாகர், திருமதி.மஞ்சுளா (வளர்ச்சி), திரு.கருணாநிதி (விவசாயம்), முதன்மைக் கல்வி அலுவலர் திரு.க.முனுசாமி, இணை இயக்குநர் (சுகாதாரம்) டாக்டர்.சுகந்தி, துணை இயக்குநர்கள் (சுகாதாரம்) டாக்டர்.பாலுசாமி (விழுப்புரம்), டாக்டர்.ஜெமினி (கள்ளக்குறிச்சி), மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.தாமோதரன், உதவி ஆணையர் (கலால்) திரு.மோகன், முன்னாள் படைவீரர் நல அலுவலர் லெப்டினன்ட் கர்னல் திருமதி.அருள்மொழி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.இரா.பாலசுந்தரம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.ஜெயக்குமார், விழுப்புரம் வட்டாட்சியர் திரு.பிரபுவெங்கடேஸ்வரன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.